# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :24 October 2024*
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

**பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்** *International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# நடனம்

# கதை பேசும் ஆடல் கலையான கதகளி

கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

சிரேஷ்ட விரிவுரையாளர்,

நடன நாடகத்துறை,

சுவாமிவிபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்

இந்தியாவில் கேரள மாநிலத்தின் பாரம்பரிய நடன வடிவம் கதகளி ஆகும். பண்பாட்டினை தொழிலாக எடுத்துக்காட்டும் அற்புதமான தெய்வீக கலை. இது பல பாத்திரங்களைக் கொண்ட ஒரு நாட்டிய நாடகமாக ஆடப்படுவருகின்றது. இராமாயணம், மகாபாரதம் போன்ற சமயம் சார்ந்த பழம் கதைகளே இவ் நடனத்திற்கு கருப்பொருளாக அமைகின்றன. கதகளி என்றால் கதையை அடித்தளமாகக் கொண்ட ஆடல் என்று பொருள்படும். ஆட்டக்கதை என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. பழைய நாடகமேடை சம்பிரதாயங்களிலிருந்தும் தேவதைகளை வழிபடும் ஆட்டங்களிலிருந்தும் தோன்றியதாகக் கருதப்படுகிறது. முடியேட்டு, பகவதிப்பாட்டு, களியாட்டம், தூக்கு முதலான இந்த ஆடல் வகைகள் ஆரியர்களின் வருகைக்கு முற்பட்ட காலத்தே மக்களின் வாழ்க்கையோடு ஒட்டித் தோன்றியதாகத் தெரிகின்றது. செவ்வியல் பாங்கிலமைந்த கதகளியின் தோற்றுவாயானது கி.பி 17ஆம் நூற்றாண்டினையே குறிப்பதாக அமைகின்றது. கதகளியின் அரங்க நிகழ்த்துகையின்போது பிரபஞ்சச் செயற்பட்டு தன்மைகளை ஒப்பு நோக்கி பார்க்கலாம். சாந்தம், கருணை, நகைச்சுவை, வீரம், கோபம் போன்றவற்றை இவர்கள் பெரும்பாலும் பிரதிபலிக்கின்றனர். எனவே இவ்வாய்வானது வரலாறு, பண்பாடு, ஆட்டமுறை என்ற விடயங்களை ஆராய்வதாகவே அமைகின்றது.

திறவுச்சொற்கள்

ஆட்டக்கதை, முடியேட்டு, தூக்கு, சாந்தம், கருணை

## முன்னுரை

அலையும் கலையும் அழகு செய்யும் மலைநாடே பண்டைய முத்தமிழ் நாடுகளில் ஒன்றான சேரநாடெனும் கேரளமாகும். அங்கு ஆடல் கலையானது மிக உன்னத நிலையிலிருந்தமையை வரலாறு புலப்படுத்தும். பதிற்றுப்பத்து பெருமைப்படுத்துகின்ற மன்னர்களில் ஒருவரான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் காலமான கி.மு 2ம் நூற்றாண்டு முதலாக கூத்துக் கலை அங்கு சிறப்பிடம் பெற்றிருந்தமையும் கி.பி 2ம்

நூற்றாண்டில் வாழ்ந்தவரான சேரநாட்டு இளங்கோவடிகள் ஆடல் கலையின் பெருமை பேசும் சிலப்பதிகார காப்பியத்தைப் பாடியமையும் வரலாற்று பதிவுகளாகும். பாட்டும் கூத்தும் சேர நாட்டு மக்களது வாழ்வின் அடிநாதமாகவே விளங்கி வந்துள்ளது. கேரளத்தின் தொன்மை மிக்கதான சாக்கைக்கூத்துஇ கூடியாட்டம், ஒட்டம்துள்ளல், கோலம்துள்ளல் மற்றும் களியாட்டங்கள் போன்ற மரபுவழி ஆட்டங்களில் உள்வாங்கல் தன்மைமிக்க செவ்வியில் வடிவமே கதகளி எனலாம்.

கதை பேசும் ஆடற்கலையான கதகளி மலையாள மக்களின் உயிர்த்துடிப்புமிக்க நிகழ்த்து கலையாகவே மதிக்கப்படுகின்றது. கையும் காலும் கண்ணும் மாத்திரமின்றி உடலின் அனைத்து அம்சங்களுமே ஆடி அபிநயிக்கும் அழகின் சிறப்பினை கதகளியில் மாத்திரமே காணமுடியும். இன்றைய செவ்வியல் பாங்கிலமைந்த கதகளியின் தோற்றுவாயானது கிபி 17 ஆம் நூற்றாண்டினையே குறிப்பதாக அமையும் எனினும் இதில் தென்படும் நாட்டிய அம்சங்கள் கி.பி 15 ஆம் நூற்றாண்டுமுதலே அங்கு எழுந்த மலையாள இலக்கியங்களில் கருக்கொண்டு உள்ளமையை ஆய்வுகள் புலப்படுத்தும். நாட்டியதர்மி மரபிலுள்ள சமஸ்கிருத நாடகங்களுடன் வைணவப் பரம்பலின் போக்கால் மலையாளத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சியானது அக்காலகட்டத்தே புதுப்புது விடயங்களை அதன் நாடக மரபுக்குள் உள்வாங்கச் செய்திருக்கின்றன. கேரளத்து கோவில்களில் தென்படும் கிபி 15 ஆம் நூற்றாண்டுக்கு உரியதான சுவர் ஓவியங்களில் கதகளியின் அடிப்படை நிலைகளை அவதானிக்க முடியும். கிபி 16ஆம் நூற்றாண்டுக்கு உரியதான மத்தன்சேரி ஆலய ஓவியங்கள் இவாடற் கலையின் சிறப்பான வெளிப்பாட்டினை சித்தரிப்பதை இன்னும் நாம் காணலாம்.

கி.பி 17ம் நூற்றாண்டுக்குரியவர்களான கள்ளிக்கோட்டை மன்னன் சமோரினும் திருவாங்கூர் மன்னன் கோட்டக்காரனும் இதன் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். ஜெயதேவரால் எழுதப்பட்ட உணர்வு மிக்க பாடல்களே இன்று கதகளியின் இசை வடிவத்திற்கு உயிர்நாடியெலாம். கிருஷ்ண பக்தனான சமோரின் மன்னன் கிருஷ்ணரின் வாழ்வியல் நிகழ்வுகளை மையப்படுத்தி கிருஷ்ண நாடகங்கள் எனும் பெயரில் எட்டு நாடகங்களை எழுதியிருக்கின்றார். இவை சமஸ்கிருத மொழியிலானவை எனினும் கோட்டக்கார மன்னன் இதே தன்மையிலான நாடக வடிவங்களை இராம நாடகங்கள் என நாமமிட்டு மலையாள மொழியில் உருவாக்கி நடிக்கவும் செய்தார். இவை இரண்டிலும் ராம நாடகங்களே கதகளியை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்றவை. இதில் பாடுவதிலும் பார்க்க அங்க அபிநயங்களே மிக முக்கியத்துவம் பெற்றனவாய் அமைந்தன.

பொதுவாக இந்திய நடன கலை வடிவங்களில் கதகளியே மிக்க நுணுக்கங்களுடனான ஆடற்கலை எனலாம். உடலின் தசை நார்களும் எலும்புகளும் நுட்பமான ஆடல் அசைவுக்கு உட்படுத்தல் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக முகத்தில் உள்ள தசை நார்களின் கணித முறையில் அமைந்த அசைவே இதில் முதன்மை பெறும். கால் அசைவுகளை பொறுத்தவரை பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்ற மண்டலத்தானமே இங்கு முழுமையாக பின்பற்றப்படுவதைக் காணலாம். கால் நீட்டங்கள் இதில் தெளிவாக அமையும். பாய்ச்சல்கள், துள்ளல்கள், வீச்சுக்கள் மற்றும் சுருள்கள் போன்றவை இதில் இயல்பாகவே வெளிப்படும். நாட்டிய சாஸ்திரம் விளக்குகின்ற கண்களின் விழிஇ இமைஇ புருவம் என்பவற்றின் நளினம் மிக்க

அசைவுகளே எந்தவெரு ஆடற் கலையிலிருந்தும் கதகளியின் தனித்துவம் கொண்ட சிறப்பியல்புகளை மேம்படுத்தி காட்டும். இதில் ஆடற் கலைஞரது அபிநயமானது மூன்று தன்மைகளை வெளிப்படுத்துவதாக அமையும். பாடலின் ஒவ்வொரு சொல்லுக்கும் ஏற்றவாறு அபிநயம் செய்தலும் பின்னர் முழு வரிக்கும் ஏற்ற தன்மையில் அதன் விளக்கத்தினை அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்துதலும் பாடகரை பின்பற்றியவாரே அபிநயம் செய்தலுமே அவை. இதில் அபிநயத்தின் போது கலைஞரின் கற்பனைத் திறனானது மிக்க முக்கியத்துவம் பெற்றதாக அமையவேண்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தினை சித்தரிக்கும் போது அதில் தனது முழு திறமையினையும் கலைஞர் வெளிப்படுத்தியே ஆகவேண்டும். கதகளியின் சொக்கட்டுக்களைப் பொருத்தவரை பெரும்பாலும் அவை பரதம் மற்றும் கதக்கின் சாயலை ஒத்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக்:-

தகதீ தகதக ததீ

தகதீ தகதக ததீ

தத் தகத தகதகத தகத

தத்தகதீ திக திகதீ தி;கதீ

தகத தகத தத்த

திகதீ திகதீ

தயீ தயீ தித்தீ தயி

தீத் தயி தீ தித்தீ

திகதயி தீ தித்தீ

எனும் சொற்க்கட்டைக் குறிப்பிடலாம்.

கதகளி ஆடற்கலையினை ஒருவர் முழுமையாகப் பயின்று அதில் தேர்ச்சிபெற குறைந்தது 12 ஆண்டுகளாவது தேவைப்படும். பெரும்பாலும் பத்துப் பன்னிரண்டு வயதளவில் இதற்கான பயிற்சிகளை ஆரம்பிக்கின்றனர். மிகுந்த உத்வேகம் கொண்ட தாண்டவடிவிலான ஆடற்கலையாக இது அமைவதால் பொதுவாக ஆண்களுக்குரிய கலையாகவே கதகளி கருதப்படுகிறது. எனும் சில பெண் கலைஞர்களும் இதனைப் பெரிதும் விரும்பி பயிலவே செய்கின்றனர். கதைகளில் இடம்பெறும் பெண்களுக்கான கும்மி ஆட்டமானது நளினம்மிக்க லசியத்தின் வெளிப்பாடாக அமைவதை அவதானிக்க முடியும்.

கதகளியின் அரங்க நிகழ்த்துகையின் போது பிரபஞ்சச் செயற்பாட்டு தன்மைகளை ஒப்புநோக்கிப் பார்க்கலாம். கேரளத்தின் தலைசிறந்த கதைகளிக் கலைஞரான பரதஐயர் இது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார். இதில் மிக முக்கியமாக படைத்தல் தொழிலின் முதல் தன்மையான பூவுலகின் வெளிப்பாட்டினை அரங்கு குறிப்பதையும் அவ்வரங்கினை நோக்கிய வண்ணம் பெரிய திரியில் மிக்க பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருக்கும் விளக்கானது சூரியனைக் குறிப்பதையும் சபையை நோக்கியவாறு மெல்லிய திரியுடன் மங்கலான ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் விளக்கானது சந்திரனை குறைப்பதையும்

காட்டுவதாக அமையும். மிக்க சத்தத்துடன் எழுப்பப்படுகின்ற பிரளய பிரளய திம்முர்தல் என்னும் மத்தள ஒளியானது பிரளய கால முடிவினையும் புதிய யுகத்தின் பிறப்பினையும் குறிக்கும். திரைக்குப் பின்புறமாக இரு கலைஞர்களால் ஆடப்படும் தோடையம் மாயையினையும் சக்தியினையும் வெளிப்படுத்தும். இதே போல் தொடர்ந்து வரும் ஒவ்வொரு நிகழ்வின் வெளிப்பாட்டினையும் ஐயர் தனது ஆய்வில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

கதகளியில் வெளிப்படும் கருப்பொருளானது அதிகாசங்கள் அல்லது புராணங்களின் கதை அம்சங்களைக் கொண்டே அமைந்ததாகும். பெரும்பாலும் ஆறு கலைஞர்களுக்கு உட்படவே இதன் பாத்திர அமைப்பு தென்படும். இதன் முதல் பகுதியானது தெய்வத்தினரையோ அன்றேல் வீரரையோ கொண்டதாகவே அமையும். சாந்தம், கருணை, நகைச்சுவை, வீரம், கோபம் போன்றவற்றையே இவர்கள் பெரும்பாலும் பிரதிபலிப்பர். இரண்டாம் பகுதியானது மனிதர் மற்றும் அரக்கத்தன்மை மிக்கவர்கள்பால் அமைவதாகும். மூர்க்கத் தன்மையும் கொடூரம், துரோகம் மற்றும் தீமை புரிதலும் இதன் வெளிப்பாடாக அமையும். முடிவாக அர்த்தமானது அழிக்கப்படுதல் வெளிப்பாடாக அமையும். கூடியாட்டத்தில் இடம்பெறும் விதுசகன் போன்ற நகைச்சுவை பாத்திரப் படைப்புகள் கதகளியில் இடம்பெறுவதில்லை. எனினும் அனுமான் மற்றும் நரசிம்மம் போன்ற பாத்திரப்படைப்புகளில் சில வேளை இவை அவதானிப்புக்குள்ளாகும்.

இவ்வாடற் கலையின் ஒப்பனையானது இதில் இடம்பெறும் பாத்திரங்களை நன்கு வேறுபடுத்தும் தன்மை மிக்கது. நாட்டிய சாஸ்திரத்தில் வரும் ஆஹாரிய அபிநயம் குறித்த அதிகாரம் நிறங்களின் குறியீடு பற்றி விவரிக்கும் தன்னையினை கதகளியின் ஒப்பனையில் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். மெல்லிய பச்சை நிறம் சிருங்காரத்தினையும்இ சிவப்பு ரௌத்திரத்தினையும்இ மஞ்சள் அற்புதத்தினையும் வெளிப்படுத்தும் தன்மை மிக்கன. முக ஒப்பனைக்கும் தலை அணிக்கும் அமைவாகவே ஆடையணிகளும் இடம்பெறும். சொத்திக்காரன் என அழைக்கப்படும் கதகளி ஒப்பனை கலைஞர் மிக முக்கியத்துவம் பெறுபவராவார். மிகுந்த பயிற்சி இதற்கு அவசியமானதாகும்.

கதகளிக்கான இசையானது கர்நாடக இசையினைச் சார்ந்தேயுள்ளது. மத்தளம் செண்டை உடக்கை சல்லரி மற்றும் ஏலத்தாளம் போன்ற வாத்தியக்கருவிகளே கதகளி ஆட்டத்தின் போது இசைக்கப்படும். முன்னைய காலங்களில் மாலை வேலைகளில் ஆரம்பமாகும் கதகளிக் கூத்து விடிய விடிய இடம்பெறும். தற்போது காலச் சூழலுக்கு அமைவாக இது நான்கு அல்லது ஐந்து மணி நேரமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரங்க நிகழ்த்துகையின் போது தொடக்கத்தே மேள பதமும் அதனைத் தொடர்ந்து தோடயமும் இடம்பெற்று அதன் பின்னர் புறப்பாடு எனப்படும் தூய நிருத்தம் நிகழும்.

ஒரு நீண்ட காலத்தை கதகளிக்கூத்தானது அதன் அமைப்பியலில் இரு வடிவங்களைக் கொண்டமைந்தன்மை புலனாகின்றது. தமிழகக் கூத்து வடக்கத்தி தெற்கத்தி எனவும் ஈழத்துக்கு கூத்து வடமோடி தென்மோடி எனவும் பிரித்தழைக்கப்பட்டதை போன்று கதகளியும் ஒருகால் வடக்கன் சித்தா தெக்கன் சித்தா எனவும் அழைக்கப்பட்டேயுள்ளது. அந்நியரின் ஆதிக்கப் பிடிக்குள் நாடு சிக்கியிருந்த போது இந்திய மரபு வழி கலைகள் பெரும் பாதிப்புக்குள்ளானதை வரலாறு உணர்த்தும். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில்

அவை மீள்வளர்ச்சியுற்ற போது ஏனைய ஆடற்கலைகளைப் போல் மங்கிய நிலையிலிருந்து கதகளியை வளர்த்தெடுக்க முன்வந்தோரில் பிரபல மலையாளக் கலைஞரான வள்ளத்தோள் மிக மிக முக்கியத்துவம் பெற்றவராகின்றார்.

நாட்டிய சாஸ்திரத்தில் வரும் ஆஹாரிய அபிநயம் குறித்த அதிகாரம் நிறங்களின் குறியீடு பற்றி விவரிக்கும் தன்மையினை கதகளியின் ஒப்பனையில் தெளிவாக புரிந்து கொள்ள முடியும். மெல்லிய பச்சை நிறம் சிருங்காரத்தினையும் சிவப்பு ரௌத்திரத்தினையும் மஞ்சள் அற்புதத்தினையும் வெளிப்படுத்தும் தன்மைமிக்கன.

1930ல் அவரால் உருவாக்கப்பட்ட கேரள கலாமண்டலம் கதகளியின் சிறப்பான வளர்ச்சிக்கு பெருந்துனை புரிந்ததை மருத்துரைக்க முடியாது. குரு கோபிநாத், தங்கமணி, கிருஷ்ணன்நாயர், வி.எம். கோவிந்தன் போன்ற புகழ்பூர்த்த பெரும் கலைஞர்கள் தொடக்க காலத்தே இங்கு பயின்று வந்தவர்கள். கலா மண்டலத்தைத் தொடர்ந்து திருவாங்கூர் ஸ்ரீசித்ரோதய நடனாலயம், எர்ணாகுளம் விஸ்வ கலா கேந்திரம், சென்னை நடன நிகேதனம், டில்லி கேரள கலா மண்டலம், கல்கத்தா சாந்தி நிகேதனம் மற்றும் சென்னை கலாஷேத்திரம் போன்றவை கதகளியை முக்கியப்படுத்தி வளர்த்தெடுக்கலாயின. இன்று உலகின் பல நாடுகளிலும் கதகளி ஒரு முக்கியத்துவம் பெற்ற ஆடற்கலையாக பயிற்றுவிக்கப்படுவதைப் பார்க்கின்றோம்.

இலங்கையை பொறுத்தவரை கதகளி குறிப்பிட்டுச் சொல்லத் தக்க வளர்ச்சி நிலையினை எட்டவில்லையெனினும் சில முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டே உள்ளன. சுமார் 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிரபல கதகளிக்க கலைஞரான குரு கோபிநாத்தும் அவரது பாரியார் தங்கமணியும் யாழ்ப்பாணத்தே கதகளி நிகழ்ச்சிகளை நடத்திய தகவல்கள் பெறப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து சில தமிழ் மற்றும் சிங்களக் கலைஞர்கள் கதகளியைப் பயின்று நிகழ்ச்சிகளை செய்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.சுப்பையா அவரது மகளான சாந்தினி சிவனேசன் மற்றும் கலைஞர் வேலானந்தன் போன்றோர் கதகளியில் மிக்க ஈடுபாடு கொண்ட கலைஞர்களாக அறியப்படுகின்றனர். வேலானந்தன் அவரது கலைக்கோயில் மூலமும் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மூலமும் சிறிது காலம் கதகளியைப் பயிற்றுவித்தமை தெரிகின்றது.

முடிவுரை

இந்திய நாட்டைப் பொருத்தவரை சிறந்த பல கதகளிக் கலைஞர்கள் இன்று வலம் வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். பரியானம்பட்டா திவாகரன், கலா மண்டலம் கேசவன் நம்பூதிரி, கலாமண்டலம் சிவதாஸ, கலாமண்டலம் சஜன், கலாமண்டலம் விஜயகுமார், வி.பி.ராமகிருஷ்ண நாயர், கலாகேந்திரம் முரளீதரன், கோட்டக்கார கங்கா, கோவிந்தன் நம்பூதிரி, டாக்டர் ஏ.கே.சபாபதி என அவர்களின் பட்டியல் தொடரும். பிரபலியம் மிக்க பெண் கலைஞர் வரிசையிலே தமயந்தி என அழைக்கப்படும் உஷாபிரியதர்சினி இன்று தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவராகின்றார். கதகளி நாடகங்களில் ருக்மணி கல்யாணம், பிரகலாத சரித்திரம், ராமசரித்திரம், சீதாகல்யாணம், பகவத்தூது, சிவதக் ஷயாகம் , கிருஷ் ண அர்ச்சுனமோட்சம், அரிச்சந்திரா, வாமணன் மகாபலி போன்றவை மிகவும்

புகழ்பெற்றவையாகும். சேலத்தின் வேர்களான பல்வேறு மரபுவழிக் கலைகளில் துளிர்த்து செவ்வியல் பரம்பலில் தடம்பதித்து - கிளைபரப்பி உயிரேட்டம் மிக்க அரங்கக் கலையாக இன்று விருந்து பட்ட கதகளி நடன நாடகம் கேரள மக்களின் கலையுணர்வினை உலகெலாம் பெருமையுடன் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

உசாத்துனை நூல்கள்


1. *Avinash.a.and c. Panddeya, shubhi publication -2017*

2. *Apnukuttan nair.D.kathakali,the art of the non-wordly,marg publication -1993*

3. *Phillip.B.zarmilli the kathakali,complex;Actor performance and stracture,abhina publication -1984*

4. *Vellinezhi achuthankutty.kathakali;alice boner-1996*

5. சிவசாயி.வி.தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள், ஏழாலை-2011

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com